**சார்பு நீதிமன்றம்,திருத்துறைப்பூண்டி**

**MCOP. 243 /2023**

நாள் 05.02.2025

**ம.சா.1. 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:–**

எனது வயது, வருமானம், தொழில் குறித்து ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். விபத்து ஏற்படுத்திய ஓட்டுநரான 1ம் எதிர்மனுதாரருக்கு என்ன வயது இருக்கும் என்றால் 15 வயது இருக்கும். மைனராக இருந்தால் ஓட்டுநர் உரிமம் கொடுக்க மாட்டார்கள் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. இந்த விபத்தை ஏற்படுத்திய 1ம் எதிர்மனுதாரர் மைனர் என்பதால் அவரின் பெற்றோர்களும், வாகனத்தின் உரிமையாளரும் தான் இழப்பீடு தொகை கொடுக்க வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. எங்கள் தரப்பில் வாகன ஓட்டுநரின் உரிமையாளரும் 1ம் எதிர்மனுதாரரின் பெற்றோர்களையும் தரப்பினர்களாக சேரத்திருக்க வேண்டும் என்று சொன்னால் விபத்தை ஏற்படுத்திய 1ம் எதிர்மனுதாரர்தான் வாகன உரிமையாளர் மற்றும் ஓட்டுநர் அவர்தான். நான் மனுவில் கோரியுள்ள இழப்பீடு தொகையை 2ம் எதிர்மனுதாரர் கொடுக்க கடமைபட்டவர் அல்ல என்று சொன்னால் சரியல்ல. நான் சைக்கிளில் செல்லும்போது சாலைவிதிகளை பின்பற்றாமல் சென்றதால்தான் இந்த விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நான் எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு அரசு மருத்துவமனையில்தான் சிகிச்சை பெற்றேன் என்றால் சரிதான். மருத்துவ சிகிச்சையின் மூலம் தற்போது எனக்கு பூரண குணமடைந்து விட்டது என்றால் சரிதான். மனுவில் குறிப்பிட்டவாறு இழப்பீடு தொகை எனக்கு

கிடைக்ககூடியது அல்ல என்றும், தள்ளுபடி செய்ய கூடியது என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Typed down to my dictation, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.

Typed down to my dictaion, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.